# திராவிட மாடல் அரசு 31

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**




# மீண்டும் பள்ளிக்குப் போகலாம்..!




பள்ளிக் கல்வியில் பொதுச் சமூகத்துக்கும் அரசாங்கத்துக்குமான இணைப்பை வலுப்படுத்துவதற்காக மே 2021-இல் இருந்து பல்வேறு புதிய முயற்சிகளைத் தொடங்கியது, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’.

அவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்களை மறு கட்டமைப்புச் செய்தது. அவற்றின் மூலம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், ஊராட்சிகள் மற்றும் சமூகத்தின் நலம்விரும்பிகள் அனைவரும் ஒரே கட்டமைப்பாக ஒன்றிணைந்தனர். தங்கள் பள்ளி மாணவர்களின் கல்வியில் மட்டுமல்லாது, உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் அந்தக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பள்ளியைக் காக்கும் திட்டம்

இந்தப் புதிய மாற்றங்களால், மக்களின் பங்களிப்பு ஒவ்வொரு பள்ளியிலும் அதிகரித்திருக்கிறது. பள்ளியின் மேம்பாட்டிலும், கல்வியின் தரத்திலும் இப்பள்ளி மேலாண்மைக் குழுக்கள் பெரும் பங்கு வகிப்பதை இன்று காண முடிகிறது.

மேலும், தங்கள் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொருளாதார ரீதியாகப் பங்களிப்புச் செய்யக் கூடிய நிறுவனங்களையோ, தனிநபர்களையோ, பள்ளியில் தன்னார்வலராகச் சேவையைத் தரக் கூடியவர்களையோ ஒன்றிணைத்துப் பள்ளியின் மேம்பாட்டுக்கென இந்த ஆற்றலைப் பயன்படுத்தக்கூடிய திட்டம் ஒன்று தேவைப்பட்டது.

அரசு மட்டுமே அதைத் தனியே செய்துவிட முடியாது. மக்களின் உதவியும் ஆதரவும் அதற்குத் தேவை. எப்போதும் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்க ஒன்றிணைய விரும்பும் எல்லோருடனும் கைகோத்திருக்கிறது தமிழ்நாடு அரசு. உள்ளூர் சமூகங்களுடன், முன்னாள் மாணவர்களுடன், தொழிற்துறையுடன், உலகமெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்களுடன் கைகோப்பதற்காகவும் **‘நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன்’** திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் 2022-ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று தொடங்கிவைத்தார்.

அதன் விளைவாகத் திரண்ட நிதியிலிருந்து இன்று பல்வேறு பள்ளிகள் பயன்பெற்றிருக்கின்றன. மாணவர்களுக்கான கழிவறை, வகுப்பறைகள் என உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பட்டிருக்கின்றன.

## இருந்த இடத்திலிருந்தே உதவலாம்

ஒவ்வொருவரும் அவரவர் படித்த பள்ளியை ஊருக்குச் சென்றுதான் காண வேண்டும் என்றில்லை. இதற்கெனவே தனியாக இணையதளம் உள்ளது. அதன் மூலம் தாங்கள் படித்த பள்ளி இப்போது எப்படி இருக்கிறது என்பதை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம்.

‘விர்ச்சுவல் பவிலியோன்’ எனும் (VIRTUAL PAVILION) **மெய்நிகர் சுற்றுலா** என்கிற தொழில்நுட்ப வசதி உள்ள இந்த இணையதளத்தின் மூலம் பள்ளியின் வகுப்பறைகள் உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் இணையம் மூலம் சுற்றுலா சென்று வரலாம். இதைப் பார்த்தபின் என்னென்ன வசதிகள் வேண்டும் என அனுமானித்துப் பள்ளிக்கு உதவலாம்.

அந்த உதவி, நிதியாகவோ அல்லது பொருளாகவோ இருக்கலாம். அவற்றை வழங்கிய பின்னர், அவை சரியான முறையில் நம் பள்ளிக்குச் சென்றடைந்திருக்கிறதா என்பதையும் இணையதளம் வாயிலாகவே அறிந்துகொள்ளலாம்.

அது போலவே நாம் பயின்ற பள்ளிக்கோ அல்லது குறிப்பிட்ட பள்ளிக்கோதான் நன்கொடையளிக்க வேண்டும் என்றில்லை. பள்ளி குறிப்பிடாமல் நிதி அளித்தால், எங்கு தேவை இருக்கிறதோ அங்கே அந்த நிதி பயன்படுத்தப்படும்.

## நன்கொடைகளில் வெளிப்படைத்தன்மை!

இந்தத் திட்டத்தின் மூலம் பெருநிறுவனங்கள், உள்ளூர் வணிக நிறுவனங்கள், தனிநபர்கள் என அனைவரையும் நோக்கி நன்கொடை வழங்க அழைப்பு விடுத்தார் முதலமைச்சர். ஒருவர் செலுத்தும் நன்கொடை, அது ஒரு ரூபாயாக இருந்தாலும்கூட, மிகுந்த வெளிப்படைத்தன்மையுடனும் கடமையுணர்வுடனும் பள்ளிகள், ஆசிரியர்கள், குழந்தைகளின் வளர்ச்சிக்கென செலவிடப்படுகிறது.

**2023 ஆகஸ்ட் 18 வரை ‘நம்ம ஊரு பள்ளி’ திட்டத்தின் வங்கிக் கணக்கில் பெறப்பட்ட நிதி விவரம்...**

- ரூ.17,74,37,807 - பெரு/சிறு/குறு நிறுவனங்களின் சமூகப் பங்களிப்பு நிதி
- ரூ. 1,55,68,452 - தனி நபர் பங்களிப்பு நிதி
- ரூ. 18,87,88,632 - இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக விடுவிக்கப்பட்ட தொகை
- ரூ. 112,40,23,438 - பெரு/சிறு/குறு நிறுவனங்களின் சமூகப் பங்களிப்புப் பொருட்கள் / தனி நபர் பங்களிப்புப் பொருட்கள் மற்றும் தன்னார்வச் சேவைகள் ஆகியவற்றின் உத்தேச மதிப்பு
- 95 - இதுவரை பங்களித்த பெரு/சிறு/குறு நிறுவனங்களின் எண்ணிக்கை
- 756 - இதுவரை பங்களித்த தனிநபர்களின் எண்ணிக்கை
- 9,105 - பெரு/சிறு/குறு நிறுவனங்களின் பங்களிப்பு மூலமாகப் பயன்பெற்ற/பயன் பெறவுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை
- 296 - தனிநபர் பங்களிப்பு மூலமாகப் பயன்பெற்ற/பயன் பெறவுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை
- 2,443 - பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வரும் பள்ளிகளின் எண்ணிக்கை

பால்யத்தில் பயின்ற பள்ளியோடும், ஊருடனுமான தங்கள் உறவை புதுப்பிக்குமாறு உலகெங்கும் வாழும் தமிழ் மக்களைத் ’திராவிட மாடல் அரசு’ கேட்கிறது. உலகின் எந்த மூலையில் வசித்தாலும், தமிழ்நாட்டில், தங்களின் சொந்த ஊரில்தான் அவர்களின் வேர்கள் வலுவாக உள்ளன.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பெருநிறுவனங்களில் பணியாற்றுவோர் சொந்த மண்ணுக்குத் திருப்பிச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு என எண்ணி **‘நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி’** வாயிலாக இப்போது வரை முன்னாள் மாணவர்கள் 2,55,380 பேர் இதில் இணைந்திருக்கின்றனர்.

இந்தத் திட்டத்துக்காகத் தனி இணையதளம் தொடங்கப்பட்டு, அதற்கெனத் தனி வங்கிக் கணக்கும் உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

இந்தத் திட்டப்பணிகளுக்கு இணையதளம் வாயிலாகப் பெறப்படும் நிதி வெளிப்படைத்தன்மையுடன் செலவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி அளவில் மேற்கொள்ளப்படும் பணிகள், அந்தப் பள்ளியைச் சார்ந்த பள்ளி மேலாண்மைக் குழு வாயிலாகவே மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணிகள் நிறைவடைந்த பின், அதுதொடர்பான பயனீட்டுச் சான்றிதழ், தொடர்புடைய நன்கொடையாளருக்கு அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நிதியின் புதிய பயன்

இதுவரையில் இந்தத் திட்டம், தொடர்பாக சென்னையிலும் கோயம்புத்தூரிலும் இரண்டு மாநாடுகள் பெருநிறுவனங்களின் ஆதரவோடும் அவற்றின் பிரதிநிதிகளின் பங்கேற்புடனும் நடந்திருக்கின்றன. முன்பு பெருநிறுவனங்களின் ‘சி.எஸ்.ஆர்.’ (CSR - CORPORATE SOCIAL RESPONSIBILITY) எனும் ‘நிறுவன சமூகப் பொறுப்புணர்வு’ நிதி, வேறு எதற்காகவெல்லாமோ செலவு செய்யப்பட்டு வந்த நிலையில், அரசு விடுத்த அழைப்பை ஏற்றுப் பல நிறுவனங்கள் தங்கள் சி.எஸ்.ஆர். நிதியை அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டுக்கெனத் தருவதற்கு முன்வந்துள்ளன.

முன்னாள் மாணவர்களும் பள்ளி மேலாண்மைக் குழுக்களும் இணைந்து அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பை முற்றிலுமாக மாற்றி அமைக்க முடியும். **‘திராவிட மாடல்’** அரசின் இந்த மிக முக்கியமான முயற்சிக்குக் கைகொடுக்க நிறுவனங்களும் தனிநபர்களும் முன்வந்திருப்பது இத்திட்டத்தின் பெருவெற்றியைக் காட்டுகிறது. ஊர்கூடித் தேரிழுக்கும் முயற்சியில் நம் அரசுப் பள்ளிகள் மேம்படுவது உறுதி..!

**...சாதனை தொடரும்**

## அடையாளத்தை அழிக்கும் கிராமங்கள்!



சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கும், ஒற்றுமைக்கும் முட்டுக்கட்டையாக இருப்பவை, சாதிய ஆதிக்க உணர்வு. அதை விட்டொழிக்க வேண்டுமெனில், மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றுதான் தமிழ்நாட்டில் பகுத்தறிவு வளர, சாதி ஒழிக்க பாடுபட்டார் தந்தை பெரியார்.

சாதிப் பெயர்களை அடைமொழியாகக் கொள்வதைத் துறப்பதற்கு இயக்கம் கண்டு அதை சாதித்தும் காட்டினார். இந்த நிலையில், தலைதூக்கிவரும் சாதிய ஆதிக்கத்துக்கு எதிராக, சாதிய அடையாளங்களை ஊர்ப் பொது இடங்களில் இருந்து அழிக்கும் முயற்சிகளை எடுத்துள்ளனர் தூத்துக்குடி, நெல்லை மாவட்ட கிராமங்களில் உள்ள மக்கள். அங்குள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில், மின்கம்பம், பேருந்து நிறுத்தம் என பொது இடங்களில் தீட்டப்பட்டுள்ள சாதித் தொடர்புடைய வண்ணங்களை அந்தந்த ஊர் மக்களே ஒற்றுமையுடன் அழிக்கத் தொடங்கி உள்ளனர்.

மாவட்டக் காவல்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட சமூக நல்லிணக்கக் கூட்டங்களில் மக்களின் மனங்களும் மாறத் தொடங்கி உள்ளன. இந்த மாற்றம் ஆதிக்க உணர்வையும் அகற்ற வேண்டும். சாதி அடையாளங்கள் நீங்கிய தமிழ்ச் சமூகமே எங்கும் எப்போதும் சாதிக்கும்.

## :ப்ளாஷ்பேக்





முத்து

### மோதிரமும் வாழ்த்தும்!

1984-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், போஸ் மைதானத்தில் நடைபெற்ற மாநாட்டில், அதிக அளவில் கழக வளர்ச்சி நிதி வசூல் செய்து கொடுப்பவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தங்க மோதிரம் அணிவிப்பார் என்ற அறிவிப்பை, அன்றைய சேலம் மாவட்டச் செயலாளர் வீரபாண்டியார் வெளியிட்டார். அப்போது திருச்செங்கோடு நகரச் செயலாளராக இருந்த நான், அதைச் சவாலாக ஏற்றுக் கொண்டு, அதிக அளவில் நிதி வசூல் செய்து கொடுத்தேன். தலைவர் கையால் மோதிரமும் வாழ்த்துகளும் பெற்றுக் கொண்டேன். நாற்பது ஆண்டுகளாக தலைமைக் கழகப் பேச்சாளராக இருந்து வருகிறேன். இதுபோன்ற அன்புப் பரிசுகள் தான் கழகப் பணியாற்ற உந்துசக்தியாக இன்று வரை விளங்குகின்றன.

**-கே. எ.முத்து, கழகச் சொற்பொழிவாளர், திருச்செங்கோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பத்து நிமிடம்...

**1977-ஆம் ஆண்டு, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட தஞ்சைப் பகுதிகளுக்குச் சென்றார் கலைஞர். அவருடன் பேராசிரியர், மன்னை நாராயணசாமி மற்றும் கழக முன்னணியினர் சென்றனர். மன்னார்குடி கீழப்பாலம் அருகே அவர்கள் வரும் வாகனத்தை மறிக்க, ஒரு கும்பல் நின்றுகொண்டிருப்பதாக, பத்து கிலோமீட்டருக்கு முன்பாகவே கழகத்தினர் தெரிவித்தனர். கலைஞரை பத்து நிமிடம் தாமதமாக வரச் சொல்லிவிட்டு மன்னை வேறொரு காரில் புறப்பட்டுச் சென்றார். பத்து நிமிட தாமதத்துக்குப் பின்னர் மன்னார்குடியில் நுழைந்த கலைஞரின் காரை மன்னை வரவேற்றார். எதிர்ப்பதற்காக நின்றிருந்த கும்பல் பாலத்துக்குக் கீழே ஓடிக் கொண்டிருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 216




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131